**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

வழக்கு எண் OS. No.100/2019 நாள்: 06.02.2026

**வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா –1 சிவமணி முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குரை சொத்துக்கள் எனக்கு முன்னார் வேறு உரிமையாளருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 17 வாதிகளுக்கும் தனித்தனியாக பத்திரம் உள்ளது என்றால் பிரிவினையில்லாத சொத்துக்களுக்கான பத்திரம் உள்ளது. வழக்குரை சொத்து குறித்து 17 பேருக்கும் சேர்த்து மொத்தம் எவ்வளவு பத்திரம் உள்ளது என்றால் 14 பத்திரம் உள்ளது. 14 பத்திரங்களும் ஒரே நபரால் பதிவு செய்து கொடுக்கப்படவில்லை. வேறு வேறு நபர்களால் பதிவு செய்து கொடுக்கப்பட்டது. 14 பத்திரங்களும் நான்கு மால் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 14 பத்திரத்தின் படி சொத்துக்களை அந்தந்த வாதிகள் அனுபவித்து வருகிறார்களா என்றால் இல்லை. மொத்தமாக தான் அனுபவித்து வரப்படுகிறது. மொத்தமாக அனுபவித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதி சுபாசினியின் கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி சுபாசினியின் கிரைய பத்திரத்தில் நான்கு மால்கள் குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றும் அதன் படி அவர் அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சுபாசினி யாரிடம்

கிரையம் வாங்கினார்களோ அந்த சொத்தை சுபாசினி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எந்த வருடம் கிரையம் பத்திரம் வாங்கினேன் என்றால் 1987 ஆம் வருடம் 9ல் 1ல் 4ல் ஒரு பாகத்தை கிரையம் வாங்கினேன். 2003 ஆம் வருடத்தில் 9 ல் ஒரு பாகத்தை கிரையம் வாங்கினேன். 2003 ஆம் வருடத்தில் 9ல் 1ல் அரை பாகத்தை கிரையம் வாங்கினேன். 2010 மற்றும் 2011 ஆம் வருடங்களில் 9ல் 1ல் பேர் பாதி பாகமும், 9ல் 1ல் 3ல் 1 பாகத்தை கிரையம் வாங்கினேன். 2012 ஆம் வருடத்தில் 27 ல் 1 பாகத்தை கிரையம் வாங்கினேன். மற்றவர்கள் கிரையம் வாங்கிய விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது மகன் கிரையம் வாங்கிய வருடம் ஞாபகம் இல்லை. மற்ற வாதிகள் கிரையம் வாங்கிய விவரம் தெரியாது. நானும் எனது மகனும் கிரையம் வாங்கிய சொத்துக்கள் எங்களின் தனித்த அனுபவத்தில் உள்ளதா என்றால் இல்லை பொதுவான அனுபவத்தில் தான் உள்ளது. நான் கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கு நான்கு மால் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் மொத்த சொத்துக்கும் நான்கு மால் சொல்லப்பட்டுள்ளது. கிரையம் வாங்கியதாக சொல்லும் கிரையம் பெற்ற பத்திரத்தின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2019 ஆம் வருடத்தில் பிரதிவாதி தான் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கை நடத்தாமல் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடத்த முடியவில்லை என தெரிவித்து என்னை வாதியாகவும் அவரை பிரதிவாதியாகவும் மாற்றி கொண்டதால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. தற்போது இந்த வழக்கில் நான் வாதி என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை குறித்தும் நிருபண வாக்குமூலம் குறித்தும் நன்றாக தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியும். நிருபண வாக்குமூலத்தில் கிரையம் வாங்கிய பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னோடு சேர்ந்த மற்ற வாதிகளின் கிரைய பத்திரங்களையும் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். என்னை தவிர மற்ற வாதிகளையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். 10 ஆம் வாதி ரூபாசினி பிரதிவாதியின் தங்கை என்பதால் அவர் இவ்வழக்கில் சாட்சியாக வருவாரா என்று எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் அனைத்து வாதிகளுக்காவும் சேர்தத்து அனைத்து வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிப்பதாக சொல்லியுள்ளது அந்த 10 ஆம் வாதிக்கு தெரியுமா என்றால் அவர் என்னிடம் பேசுவது இல்லை. மற்ற வாதிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். மற்ற வாதிகளின் கிரைய பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அந்த கிரைய பத்திரங்களில் நான்கு மால் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மொத்த இடத்திற்கு மால் சொல்லப்பட்டுள்ளது. என்னுடைய கிரைய பத்திரத்திலும் மற்ற வாதிகளின் கிரைய பத்திரத்திலும் மொத்த சொத்து குறிப்பிட்டிருந்தாலும் அந்தந்த சொத்துக்குரிய தனித்தனி நான்கு மால் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஒவ்வொரு சர்வே நம்பர் உள்ள இடத்திற்கும் மால் சொல்லப்பட்டுள்ளது. அந்த சொத்து பிரிவினையில்லாத சொத்தாக காட்டப்பட்டுள்ளது. மொத்த சொத்தும் ஒரு குடும்பத்தில் இருந்து

பிரிக்கப்பட்டதா என்றால் 9 முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து. அந்த 9 முன்னோர்களின் பேர பிள்ளைகளான எங்களுக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறோம். என்னை தவிர மற்ற 16 வாதிகளும் பிரதிவாதியும் வாரிசாக வருகிறார்களா என்றால் 16 வாதிகளும் வாரிசுகள் ஆவார்கள். பிரதிவாதி வாரிசு கிடையாது. எங்களின் வாரிசுகளிடம் இருந்து பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் 4 வது பக்கத்தில் 5 வது பாராவில் 7 கூட்டுவயல் என்று சொல்லியுள்ளதற்கு ஆதரவாக வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்றால் 2003 ஆம் வருடத்தில் 9 ல் 1 ஐ எடுத்து அந்த 1 ல் கால் பாகம் (60 செண்டு ), 2003 ஆம் வருடத்தல் பழனிசாமி என்பவரிடம் ஒரு ஏக்கர் 20 செண்டு வாங்கியுள்ளார். 2005 ஆம் வருடத்தில் வனிதா என்பவரிடம் 9 ல் 1 பாகம் ( 2 ஏக்கர் 40 செண்டு ) கிரையம் வாங்கியுள்ளார். 2010 ஆம் வருடத்தில் அமனிதாய் என்பவரிடம் இருந்து 9 ல் 1 பாகத்தில் 3 ல் 1 பாகத்தை ( 80 செண்டு) கிரையம் பெற்றுள்ளார். 2011 ஆம் வருடத்தில் ஜெகதீசன் என்பவரிடம் 9 ல் 1 ல் 3 ல் 1 பாகத்தை (80 செண்டு ) கிரையம் பெற்றுள்ளார். மேற்படி 5 நபர்களும் எங்களின் குடும்ப வாரிசுகள் ஆவார்கள். வாரிசுகள் கிரையம் செய்யும் போது அவர்கள்அனுபவத்திலும் சுவாதினத்திலும் இருந்த சொத்தை தான் பிரதிவாதி கிரையம் பெற்று தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரிவினையில்லாமல் தான் வாங்கியுள்ளார். என்னுடைய முன்னோர்கள் நாட்டு நடப்பு வழக்கப்படி வாய்கரலாக பிரித்து அவரவர் அனுபவித்து வந்த பாகத்தை தான் வாதிகளாகிய

எங்களுக்கும் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய முன்னோர்கள் அவரவர் பாகத்தை வாய்கரலாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்ற விசயம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மொத்த சொத்தில் 2 கிணறுகள் உள்ளது. அந்த கிணறில் வாதிகளாகிய நாங்கள் வாங்கிய கிரைய சொத்திற்கும் பிரதிவாதி வாங்கிய கிரைய சொத்திற்கும் பாகம் உள்ளது என்று பொதுவாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்குரையின் 4 ஆம் பக்கத்தில் 5 வது பாராவில் 700 தென்னை மரங்களை நட்டு அதில் இதர பயிர் வருமானம் செய்து அதில் செலவு போக மீதி பணத்தை பங்கீட்டு செய்துள்ளோம் என்று சொல்லியுள்ளது சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அப்படி எத்தனை வருடம் பங்கீடு செய்துள்ளார் என்பதற்கான கணக்கு வரவு செலவு உள்ளதா என்றால் உள்ளது. எல்லாவற்றிற்கும் சேர்த்து கணக்கு பார்த்தது மற்றும் மேற்பார்வை செய்தது யார் என்றால் முதலில் வெண்முருகன் 2 வதாக செல்வகுமார் பார்த்து வந்து தற்போது நான் பார்த்து வருகிறேன். மேற்படி நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்து ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். சுமார் எத்தனை வருட கணக்கு உள்ளது என்றால் 2010 ஆம் வருடத்திலிருந்து கணக்கு வரவு செலவிற்கு நோட்டு உள்ளது. அந்த நோட்டில் பிரதிவாதி 10 ஆம் வாதி கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் கையெழுத்துசெய்துள்ளார்கள். பிரதிவாதி தன்னுடைய பாகத்தை 2 நபர்களுக்கு கொடுத்து பதிவு ஒத்தி கொடுத்து அந்த

ஒத்தியை எடுத்தவர்கள் அனுபவித்து பராமரித்து வந்தார்கள் மற்றும் வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை. பிரதிவாதியின் பத்திரப்படியான பாகத்தை ஒத்திக்கு விட்டு ஒத்திக்கு எடுத்தாவர்கள் அனுபவித்து வரும் விசயம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் பிரதிவாதியாகவும் இருந்த போதும் சரி வாதியாகவும் இருந்த போதும் சரி மொத்த சொத்திற்கான வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்குரையின் 4 வது பக்கத்தில் 6 வது பாராவில் 21 ஏக்கர் 63 செண்டு நிலத்தில் சுமார் 4 ஏக்கர் நிலம் மேட்டு பகுதியாகவும் முட்கள் நிறைந்த காடுகளாகவும் எவ்வித விவசாயமும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக சொல்லியுள்ளதில் அந்த சொத்து எந்த வாதியின் பத்திரத்தில் வருகிறது என்று சொன்னால் எல்லாருடைய பத்திரத்திலும் வருகிறது. நான் சொல்வது போல் எல்லாருடைய பத்திரத்திலும் வரவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்து குறிப்பிட்ட ஒரு சர்வே நம்பரில் வருகிறது. அந்த சர்வே எண் உள்ள நிலம் பத்திரப்படி யார் பாகத்தில் வருகிறது என்றால் சொத்துகள் பிரிக்கப்படவே இல்லை. சொத்துக்களை நானோ எனது முன்னோர்களோ மற்ற வாதிகளோ தனித்தனியாக பிரித்து பட்டா கொடுக்கும் படி கேட்டோமா என்றால் இல்லை. பிரதிவாதி என் பத்திரத்தின் படியும் கூட்டுபட்டாவின் படியும் சொத்தை பிரித்து கொடுக்க வேண்டுமென்ற கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் சம்மதம் தெரிவித்தேனா என்றால் பிரதிவாதி அந்த வழக்கை நடத்தவில்லை. நான் அந்த வழக்கை

நடத்தினேன் என்றும் அதற்கு மறுப்பு தெரிவித்தேன் என்றும் அதனால் பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து சர்வே செய்து கொடுக்கும் படி உத்தரவு வாங்கினார் என்றால் தாசில்தார் மீது வழங்கு தாக்கல் செய்து 9 சர்வே எண்ணில் உள்ள அத்து மாலை காட்ட சொல்லி தாவா வழக்கை மறைத்து உத்தரவு வாங்கினார். ஆனால் பிரதிவாதி சர்வேயர் மூலமாக 27 அடியாட்களை வைத்து நீதிமன்ற உத்தரவிற்கு புரம்பாக வேலி போட்டார். உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதி தன்னுடைய கிரைய பத்திரத்தின் படி அளந்து தர வருவாய் துறையினரிடம் கேட்டதால் அவரை மட்டும் கட்சியாக சேர்த்தார் என்றும் அதனால் என்னை கட்சியாக சேர்க்கவில்லை என்றும் அதனால் தாவா வழக்கு பற்றி கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.02.06 17:06:53 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**